| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செங்கோடகவுண்டர் | நாள் | 27.01.2021 |
| தகப்பனார் பெயர் | சின்ன நாச்சியப்பக்கவுண்டர் | | |

2, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்குசொத்தின் பழைய சர்வே எண்.294, அது மொத்த விஸ்வீரணம் 19 ஏக்கர் 82 சென்ட் என்றால் ஆமாம். 1946 ல் செல்லப்ப மகன் நாச்சப்பனும், ராமசாமி மகன் நாச்சப்பன் ஆகியோர் 12 ஏக்கர் 38 சென்டை கிரையம் பெற்றுள்ளனர் என்றால் ஆமாம். அந்த 12 ஏக்கர் 38 சென்டை இருவரும் வாய்மொழியாக பாகம்பிரித்து அனுபவித்து வந்தனர் என்றால் ஆமாம். 1953 ல் செல்லப்ப மகன் நாச்சியப்பனும், நாச்சியப்பனின் மனைவி பௌத்தியம்மாளும் பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் ஆமாம். ஏ அட்டவணை சொத்து நாச்சியப்பனுக்கும், பி அட்டவணை சொத்து பௌத்தியம்மாளுக்கும் பிரிக்கப்பட்டது என்றால் ஆமாம். ஏற்கனவே இருந்த சர்வே எண்.294 என்பது சர்வே எண்.852 ஆக பிரிகிறது என்றால் ஆமாம். அந்த பௌத்தியம்மாளுக்கு ராமசாமி, சின்னராமன் (எ) ராமசாமி, இளையப்பகவுண்டர் ஆகியோர் வாரிசுகள் என்றால் ஆமாம். ராமசாமியின் மகன் தான் மணி என்றால் ஆமாம். பௌத்தியம்மாளின் மகன் இளையப்பகவுண்டர் என்பவரிடம் வா.சா.ஆ.2 ன் மூலம் 1973 ல் 2 ஏக்கர் 20 சென்டை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய பத்திரத்தின் மூலம் சர்வே எண்.852 என்பது 140 ஆக மாறுகிறது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் நான் வாங்கிய 2 ஏக்கர் 20 சென்டிற்கு செக்குபந்தியில்லாமல் மொத்த சொத்தான 6 ஏக்கர் 60 சென்டிற்கு செக்குபந்தி குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் கண்டுள்ளது போல் செக்குபந்தி காணப்படுகிறது என்றால் ஆமாம். அதில் பொதுவில் 3 ல் ஒரு பாகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மீதியுள்ள 4 ஏக்கர் 40 சென்டில் மற்றொரு மகனான ராமசாமி சின்னராமன் (எ) ராமசாமிக்கு பாத்தியம் என்றால் ஆமாம். பத்திரத்தை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு இல்லை என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்று 27 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் வா.சா.ஆ.2 ல் கண்டுள்ள சொத்துவிபரத்தை தான் வழக்கு சொத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் வாங்கிய 2 ஏக்கர் 20 சென்டிற்கு செக்குபந்தி என்னவென்று வழக்குரையில் கூறவில்லை என்றால் ஆமாம். 3 ல் ஒரு

பங்கு என தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்துவிபரத்தில் புதிய சர்வே எண் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்துவிபரத்தில் புதிய சர்வே எண் குறிப்பிடாமல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் மட்டும் சர்வே எண்.852 என்பது 140 என ஆனது எனவும், அதன்பிறகு 277/5 மற்றும் 277/6 என மாற்றப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம். வழக்குரை பத்தி 3 ல் உட்பிரிவின்போது அளவு சரியாகவில்லை எனவும், உட்பிரிவு தவறானது என கூறியுள்ளதற்கு மேல்முறையீடு செய்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள வம்சாவளிப்பட்டியலை குறியீடு செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வம்சாவளிப்பட்டியலில் அளவுகள் குறைவாக காட்டப்பட்டதால் தான் அது குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 6 ஏக்கல் 60 சென்டில் நான் கிரையம் பெற்ற 2 ஏக்கர் 20 சென்ட் போக மீதியுள்ள 4 ஏக்கர் 40 சென்ட் ராமசாமி, சின்னராமன் ஆகியோரிடம் தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த 2 ஏக்கர் 20 சென்ட் போக மீதியுள்ள சொத்துக்களில் எனக்கு உரிமையில்லை என்றால் பத்திரத்தில் உள்ளபடி தான் உரிமை கேட்கிறேன். 1973 ல் நான் கிரையம் பெற்றாலும் எந்த சொத்து என தெரியாததால் தான் 2015 ல் நீதிமன்ற ஆணையாளர் வரும்போது அனைத்து சொத்துக்களும் அளக்கப்பட்டது என்றால் பொதுவாக அளக்கப்பட்டது. ஏற்கனவே நாங்கள் வாங்கியுள்ள 3 ஏக்கர் 30 சென்டையும் சேர்த்து எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தான 8 ஏக்கர் 80 சென்டை தவிர எவ்வளவு சொத்துக்கள் எங்களுக்கு 15 ஏக்கர் உள்ளது என்றால் ஆமாம். நானும், என்னுடைய தம்பியும் 1975 ல் கிரையம் வாங்கிய நாச்சியப்பன் நிலத்திற்கு கிழக்கு, அத்தாயம்மாள் நிலத்திற்கு தெற்கே என கண்டுள்ளது என்றால் ஆமாம். செல்லப்பகவுண்டர் மகன் நாச்சியப்பன் குடும்பத்திலிருந்து நான் விலைக்கு வாங்கவில்லை என்றால் ஆமாம். அந்த 6 ஏக்கர் 60 சென்டில் சின்னகவுண்டர் வகையறாவிடமிருந்து 6 ம் பிரதிவாதி தேவராஜன் வாங்கியதை ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய தம்பி ராமசாமியை அந்த ராமசாமி எனக்கூறி எங்களுடைய நிலத்தை கிரையம் வாங்கிவிட்டார்கள். என்னுடைய வழக்கில் மணியின் மகன் ராமசாமி 1 ம் பிரதிவாதியாகவும், சின்னப்பன் மகன் ராமசாமி 4 ம் பிரதிவாதியாகவும் உள்ளார் என்றால்

ஆமாம். என்னுடைய தம்பி 2ம் வாதியின் பெயரும் ராமசாமி என்றால் ஆமாம். சின்னப்பன், ராமசாமி, புண்ணியமூர்த்தி ஆகியோர் ஒரே குடும்பம் எனவும், 3 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களுடைய உறவினர்கள் என்றால் ஆமாம். பௌத்தியம்மாளுக்கு நாச்சியப்பன் தம்பி என்றால் உறவினர்கள். தம்பியா என்பது எனக்கு தெரியாது. பௌத்தியம்மாளும், நாச்சியப்பனும் அக்கா, தம்பி என்பதால் பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் அவர்கள் உறவினர்கள். 1983 லேயே மீதியுள்ள 4 ஏக்கர் 40 சென்டில் 2 ஏக்கர் 6 சென்ட் வாங்கினாரா என்றால் வாங்கியதாக கூறினார்கள். ராஜாத்தி மணி 1 ஏக்கர் 42 சென்டை சின்னராமனிடம் கிரையம் பெற்றார் என்றால் ஆமாம். ராமசாமியிடம் மீதியிருந்த சொத்தில் 90 சென்டையும், 20 சென்டையும் மணிக்கு ராமசாமி 2006 ல் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் என்னுடைய தம்பி ராமசாமி பெயரை குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளார். என்னுடைய தகப்பனார் பெயர் சின்ன நாச்சியப்பன். மணியின் தகப்பனார் பெயர் ராமசாமி. ராமசாமியின் தகப்பனார் பெயர் நாச்சியப்பன் (எ) சின்ன நாச்சியப்பன் என்றால் சின்ன நாச்சியப்பன் இல்லை. என்னுடைய தம்பி மணிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்கவில்லை என்றால் ஆமாம். என்னுடைய தம்பி பெயரில் மேற்படி பத்திரங்கள் எழுதிவைத்ததாக கூறி மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்படவில்லை. அந்த தள்ளுபடியை எதிர்த்து சென்னையில் மேல்முறையீடு செய்தோம் என்றால் ஆமாம். இளையப்பனிடம் நான் தான் கிரையம் பெற்றேன். என்னுடைய தம்பி கிரையம் பெறவில்லை. சர்வே எண்.140 ல் 8 ஏக்கர் 80 சென்ட் உள்ளதாக கோருகிறேன்.

2, 8 பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.